(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 7.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2024 டிசம்பர் 18, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

2/2024

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்பொழுது அரசாங்கத்திற்கு சொந்தமாகவுள்ள விவசாயப் பண்ணைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் மற்றும் முகவரிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் மேற்படி ஒவ்வொரு பண்ணையிலிருந்தும் ஈட்டப்பட்ட இலாப/நட்டங்கள் ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்படி பண்ணைகளின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

58/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள புகையிரத எஞ்சின்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அதற்கென செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு புகையிரத எஞ்சினின் இலக்கம் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட நாடு தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறிய எஞ்சின்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரத எஞ்சின்களின் எண்ணிக்கை மற்றும் சேவையில் ஈடுபடுத்தப்படாத புகையிரத எஞ்சின்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) புகையிரத எஞ்சின்களை சேவையில் ஈடுபடுத்தாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி புகையிரத எஞ்சின்களை இறக்குமதி செய்வதில் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

65/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை மற்றும் எழுவான்கரை பிரதேசங்களை இணைக்கும் பிரதான பாலமான மண்டூர் - குருமன்வெளி பாலத்தை நிர்மாணிப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டதைத் தவிர இற்றைவரை வேறு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இதுவரையிலும் மேற்படி பாலம் நிர்மாணிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு, மண்முனை தெற்கு எருவில்பற்று ஆகிய பிரதேசங்களை இணைக்கின்ற அம்பிளாந்துறை, குருக்கள்மடம் பாலத்தை புதிதாக நிர்மாணிப்பதற்கு இதுவரையில் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இதுவரையிலும் மேற்படி பாலம் நிர்மாணிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கோரளைப்பற்று - தெற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள திகிலிவெட்டை - சந்திவெளி பாலம் மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புன்னக்குடா – களுவன்கேணி பாலத்தை புதிதாக நிர்மாணிப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

78/2024

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை நெல் சந்தைப்படுத்தல் சபை அடைந்த இலாபம்/நட்டம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் அச்சபை நட்டம் அடைந்திருப்பின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) நெல் சந்தைப்படுத்தல் சபையை வலுவூட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

86/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள சோளத்தின் அளவு ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் சோளம் இறக்குமதி செய்யப்பட்டிருக்குமாயின், அதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இலங்கையில் சோள உற்பத்தியை அதிகரிக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

97/2024

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசியின் அளவு எத்தனை மெட்ரிக் தொன் என்பதையும்;

(ii) மேற்படி இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசி நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படும் விலை யாது என்பதையும்;

(iii) அரச மற்றும் தனியார் துறை களஞ்சியசாலைகளில் உள்ள நெல் மற்றும் அரிசி கையிருப்புகள் பற்றிய தரவுகள் அரசாங்கத்திடம் உள்ளதா என்பதையும்;

(iv) நெல் விவசாயிகளுக்கு உர நிவாரணம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அரிசி இறக்குமதி செய்யப்படுவதனால் கிடைக்கும் நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

100/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெல் கொள்வனவு தொடர்பில் தற்போது செயற்படுத்தப்படும் நடைமுறை யாதென்பதையும்;

(ii) இம்முறை அரசாங்கம் கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ள நெல்லின் அளவு எத்தனை மெட்ரிக் தொன் என்பதையும்;

(iii) மேற்படி நெல் கையிருப்பு களஞ்சியப்படுத்தப்படும் இடங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நெல் கொள்வனவுக்காக விதிக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த விலை ஒவ்வொரு நெல் வகைக்கும் ஏற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி விலையை நடைமுறைப்படுத்தும் கால வரையறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

108/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கைக்கு கிடைத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் எண்ணிக்கை மற்றும் அதன் பெறுமதி வருடாந்த அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) இலங்கைக்கு அதிகளவான நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

130/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 முதல் 2022 வரை இலங்கையில் அரசாங்க மற்றும் தனியார் துறையால் மேற்கொள்ளப்பட்ட கோவிட் - 19 இக்கான துரித பிறபொருள் எதிரி பரிசோதனைகள் (RAT) மற்றும் பொலிமரேஸ் சங்கிலித் தாக்கம் (PCR) பரிசோதனைகள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை;

(ii) தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையுடன் (NMRA) மேற்படி பரிசோதனைகள் ஒவ்வொன்றுக்காகவும் பதிவுசெய்யப்பட்ட முகவர்களின் பெயர்கள்;

யாவையென்பதை வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட துரித பிறபொருள் எதிரி பரிசோதனைகள் (RAT) மற்றும் பொலிமரேஸ் சங்கிலித் தாக்கம் (PCR) ஆகிய பரிசோதனைகளுக்காக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட அலகுக் கிரயம்;

(ii) மேற்குறிப்பிட்ட பரிசோதனைகளுக்காக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு;

ஆகியவற்றை வெவ்வேறாக இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

144/2024

கௌரவ தேவானந்த சுரவீர,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக நெகும நிறுவனத்தை மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த நிறுவனத்திற்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்துகளின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிறுவனம் குறித்த சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அந்த நிறுவனத்தால் HC(CIVIL)32/2023/CO எனும் இலக்கம் கொண்ட வழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) அந்த வழக்கிற்காக இதுவரை செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2025, ஜனவரி 07 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 102 - நிகழ்ச்சித்திட்டம் 01 — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2024 டிசம்பர் 17),— "†2024 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பமாகி 2024 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடையும் நிதி வருடத்தின் பயன்பாட்டுக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குரிய ஏனைய நிதியங்களிலிருந்து அல்லது நிதியிலிருந்து அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிவின் பேரில் அரசாங்கத்தினால் பெறப்படும் ஏதேனும் கடன் தொகையிலிருந்து ரூபா ஆறாயிரத்து ஐந்நூறு மில்லியனை (ரூபா 6,500,000,000) விஞ்சாத மேலதிக நிதியினைச் செலுத்தவேண்டும் என்பதுடன், அந்நிதியினை இங்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு செலவுற வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| **செலவினத் தலைப்பு** | **102** | - | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் (2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அமைச்சின் பெயர்) | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **01** | - | தொழிற்பாட்டு நடவடிக்கைகள் | |
| | | | மீண்டெழும் செலவினம் | ரூ. 6,500,000,000 |
| | | | **மொத்தச் செலவினம்** | **ரூ. 6,500,000,000 "** |

எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

† 2024 டிசம்பர் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2024 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

1 முதல் 13 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 228,123,000,000 ஆகும்.

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் ஜே ஜே டெக்ஸ்டைல்ஸ் லங்கா (பிரைவெட்) லிமிடெட் தொடர்பில் அப்போதைய முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 2399/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 117 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2024 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பமாகி 2024 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடையும் நிதி வருடத்தின் பயன்பாட்டுக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குரிய ஏனைய நிதியங்களிலிருந்து அல்லது நிதியிலிருந்து அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிவின் பேரில் அரசாங்கத்தினால் பெறப்படும் ஏதேனும் கடன் தொகையிலிருந்து ரூபா முப்பத்து மூன்று ஆயிரத்து எண்ணுற்றுப் பதினேழு மில்லியனை (ரூபா 33,817,000,000) விஞ்சாத மேலதிக நிதியினைச் செலுத்த வேண்டும் என்பதுடன், அந்நிதியினை இங்குள்ள அட்டவணையில் குறிப்பிடப் பட்டவாறு செலவுற வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| **செலவினத் தலைப்பு** | **117** | - | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு (2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அமைச்சின் பெயர்) | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **02** | - | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | | மூலதனச் செலவினம் | ரூ. 33,817,000,000 |
| | | | **மொத்தச் செலவினம்** | **ரூ. 33,817,000,000** |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2024 டிசம்பர் 06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2024 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

1 முதல் 14 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 234,623,000,000 ஆகும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.